ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2456/03 - 2025 සැප්තැම්බර් මස 29 වැනි සඳුදා - 2025.09.29

2456/03 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**வடக்கு மாகாண நிருவாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கிளைக்குழுக்களைக் கொண்டு இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட ஆரம்ப நிலைக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவு செய்யப்பட்ட உபவிதி ஏற்பாடுகளுக்கு அமைய கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்ட விதிகள்**

வடக்கு மாகாண நிருவாக எல்லையில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கிளைக்குழுக்களைக் கொண்டு இயங்கி வரும் ஏனைய ஆரம்ப நிலைக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்ட உபவிதி ஏற்பாடுகளின் படி எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய நடராஜா திருலிங்கநாதன் ஆகிய நான், 1977.12.28 ஆந் திகதிய 297/7ஆம் இலக்கம் கொண்டதும், 1998 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதிய 1028/06 ஆம் இலக்கம் கொண்டதுமான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான விதிகளை இக்கட்டளை மூலம் வடக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2025.08.15 ஆந் திகதியிலிருந்து செயற்பாடற்றது என இத்தால் பிரகடனப்படுத்துவதுடன், அதற்குப்பதிலாக இதன் கீழ்க் காட்டப்பட்டுள்ள 01 தொடக்கம் 24 வரையான விதிகள் 2025.08.15 ஆந் திகதியிலிருந்து செயற்பாடு உடையதாகும் எனவும் பிரகடனப்படுத்துகின்றேன்.

**ந.திருலிங்கநாதன்,**  
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்,  
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்,  
வடக்கு மாகாணம், யாழ்ப்பாணம்.

1. சுருக்கப் பெயர்:  
வடக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களினதும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் மற்றும் கிளைப் பொதுச்சபையுடன் கூடிய கிளைக்குழுக்களைக் கொண்டு இயங்கும் ஆரம்ப நிலைக்கூட்டுறவுச் சங்கங்களினதும் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள் என அழைக்கப்படும்.

2. ஆணையாளரால் காலத்துக்கு காலம் கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வது தொடர்பில் வெளியிடப்படும் பொதுப் பணிப்புரைகளுக்கமைய கிளைப் பொதுச்சபையுடன் கூடிய சங்கங்கள் அங்கத்தவர் பட்டியல்களை முடிவுறுத்தி கிளைக்குழுத் தெரிவினை மேற்கொள்ளுதல் வேண்டும்.

3. கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஆணையாளரினால் பெயர் குறித்துரைக்கப்படும் உத்தியோகத்தர் கிளைப் பொதுச்சபையின் கூட்டத்தைக் கூட்டுவதற்கான அதிகாரங்களைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

PG7263 - 14 (2025/09)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. பிரிவு-3இல் குறிப்பிடப்பட்ட அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் கிளைப் பொதுச்சபைக் கூட்ட அறிவித்தலை 1992ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, (திருத்தச்) சட்டத்தாலும், 1983ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க (திருத்த) சட்டத்தாலும் திருத்தப்பட்ட 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 11ஆ. இற்கமைவாக கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகுதி பெற்ற உறுப்பினர்களுக்கு இப்பொதுக்கூட்ட அறிவித்தல் அனுப்பப்படுதல் வேண்டும்.

5. கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்க தகைமையுள்ள மொத்த உறுப்பினர்களில் நான்கில் ஒரு பங்கினர் அல்லது 25 பேர் இதில் எது குறைவோ அத்தொகையாக இருத்தல் வேண்டும்.

6. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுள்ள உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் அந்தந்தக் கிளைகளிலும், சங்கத்தின் தலைமையலுவலகத்திலும் பார்வையிடுவதற்கும், ஆட்சேபனைகளை தெரிவிப் பதற்குமாக காட்சிப்படுத்தல் வேண்டும். இப்பட்டியல் அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களின் உப விதி ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டவாறான வாக்களிக்கத் தகைமையுடைய அங்கத்தவர் பட்டியலாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

7. கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்களை கூட்டுவதற்கான இடம் மற்றும் கால அட்டவணை ஆணையாளரினால் நிர்ணயிக்கப்பட்டு பிரிவு 6இல் குறிப்பிடப்பட்ட அங்கத்தவர் பட்டியலுக்கமைவாக ஒவ்வொரு அங்கத்தவருக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

8. ஆணையாளரினால் நிர்ணயிக்கப்பட்ட இடம் மற்றும் கால அட்டவணைக்கமைய, பிரிவு 3இன் படி நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் கிளைப் பொதுச்சபையை தவிசாளர் என்ற ரீதியில் கூட்டி அக்கூட்டத்தில் குறித்த கிளைக்குழுத் தெரிவு தொடர்பான நடைமுறைகளை தெளிவுபடுத்துவதுடன் பிரிவு 9இல் குறிப்பிட்டதன் படி தெரிவுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

9. தவிசாளர், குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட ஆகக்குறைந்தது இருவர் உள்ளடங்கலாக சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட உபவிதி ஏற்பாடுகளுக்கமைவாக ஒவ்வொரு வகுதியிலும் தெரிவு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கைக்கமைய உறுப்பினர்களைத் தெரிவு செய்யுமாறு பொதுச்சபையைக் கோருதல் வேண்டும். அத்துடன் சங்கங்களின் கிளைக்குழுவிற்கு மகளிர் சார்பான தெரிவுகள் மேற்கொள்ளப்படுகையில் அச்சங்கங்களின் உப விதி ஏற்பாடுகள் எவ்வாறாக அமைந்த போதிலும், கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்த உறுப்பினர்களில் இருந்து நேரடியாக மகளிர் தெரிவு இடம்பெறுதல் வேண்டும். இதேபோன்றே ஏனைய வகுதி தெரிவுகளும் மேற்கொள்ளப்பட்டு கிளைக்குழுத் தெரிவு மேற்கொள்ளப்படல் வேண்டும். உரிய வகுதிப்பிரிவினர் தெரிவு செய்யப்படாது விடின் அது வெற்றிடமாக விடுதல் வேண்டும்.

10. கிளைப் பொதுச் சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள், சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட உப விதி ஏற்பாடுகளுக்கமைவாக ஒவ்வொரு வகுதியிலும் தெரிவு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு மேலதிகமாக கிடைக்கப்பெறின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவினை மேற்கொள்ளுதல் வேண்டும். இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வதாக தவிசாளர் முடிவு செய்ததன் பின்னர் சபையிலிருந்தான மேலதிக முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளாது விடல் வேண்டும்.

11. இரகசிய வாக்கெடுப்பு நடைமுறைகள்-

(i) முன்மொழியப்பட்ட ஒழுங்கில் அபேட்சகர்களது பெயர்களை காட்சிப்படுத்தல் வேண்டும்.

(ii) தெரிவுக்கான தேர்தலை நடாத்துவதற்கு திருவுளச்சீட்டு மூலம் முன்மொழியப்பட்ட அபேட்சகர்களுக்குரிய இலக்கங்களை வழங்குதல் வேண்டும்.

(iii) சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட உப விதி ஏற்பாடுகளுக்கமைவாக ஒவ்வொரு வகுதியிலும் தெரிவுகள் மேற்கொள்ளப்படுகையில், வெவ்வேறான வாக்குப்பெட்டிகளை பொருத்தமான வகையில் பயன்படுத்துதல் வேண்டும்.

12. இரகசிய வாக்கெடுப்பின் போது இரண்டு அங்கத்தவர்களுக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட அங்கத்தவர்களிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெற்றிருந்தால் திருவுளச் சீட்டின் மூலம் அபேட்சகர் ஒருவரை அல்லது அபேட்சகர்களை தேவைக்கேற்றாற்போன்று தவிசாளர் தெரிவுகளை மேற்கொள்ளல் வேண்டும். சம அளவினதான வாக்குகள் கிடைக்கப்பெறும் போது, அத்தகையோரை வெற்றியீட்டியவர்களுடன் சேர்த்து எண்ணுமிடத்து தேவைப்படும் எண்ணிக்கையினரான அபேட்சகரைப்பெறக் கூடியதாயிருப்பின், அவ்வண்ணம் திருவுளச்சீட்டின் மூலமான தெரிவுக்கு அவசியமேற்படாது.

13. கிளைக்குழு தெரிவு நடவடிக்கைகள் தொடர்பாக பின்வரும் மூன்று விடயங்கள் தொடர்பிலேயே அக்கூட்டத்தில் சமுகமளித்திருந்த அங்கத்தவர்களால் எழுத்து மூலமாக ஆட்சேபனைகளை முன்வைக்க முடியும்.

(i) சங்கத்தின் உப விதி ஏற்பாட்டின் படி கிளைக்குழுவிற்கு ஒரு உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கு தகைமையற்றவராகக் காணப்படின்.
(ii) கிளைக்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்படுபவர் அல்லது முன்மொழிபவர் அல்லது வழிமொழிபவர் பெயர் வாக்களிக்க தகைமையுடைய அங்கத்தவர் பட்டியலில் காணப்படாது இருப்பின்.
(iii) கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவின் போது அங்கத்தவர் பட்டியலில் பெயர் காணப்பட்ட ஒருவர் கூட்டத்திற்கு சமுகமளிக்காத நிலையில் அவர் பெயரில் வேறு ஒருவர் ஆள் மாறாட்டம் செய்து கிளைக்குழு உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருப்பின்.

14. பிரிவு 13இன் (i), (ii), (iii) ஆகிய உபபிரிவுகளின் கீழ் கிடைக்கப்பெறும் ஆட்சேபனைகளில் (ii), (iii) ஆகிய உபபிரிவுகளின் கீழான ஆட்சேபனைகள் தொடர்பாக தவிசாளர் ஆராய்ந்து முடிவு செய்யலாம். (i)ஆம் உபபிரிவின் கீழ் கிடைக்கப்பெறும் ஆட்சேபனை ஆணையாளரின் முடிவிற்காக அனுப்பி வைக்கப்படும் என்பதை தவிசாளர் சபைக்கு தெரிவித்து, தெரிவு நடவடிக்கையினை தொடர்ந்து நடாத்துதல் வேண்டும்.

15. மேற்படி ஆட்சேபனைகள், போட்டியுள்ள தெரிவாயின் இரகசிய வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட முன்னரும், போட்டியல்லாத தெரிவாயின் தவிசாளரால் கிளைக்குழு உறுப்பினர்களது பெயர்கள் சபையில் பிரகடனம் செய்யப்பட முன்னராகவும், தவிசாளருக்கு முன்வைக்க முடியும்.

16. கிளைக் குழுத்தெரிவின் போது போட்டி ஏற்படும் சந்தர்ப்பங்களில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு மேற்கொள்ளப்படும் என்று தவிசாளரால் முடிவு செய்யப்பட்டு வாக்கெடுப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கும் வரை கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுள்ள உறுப்பினர்களின் வரவு கருத்திற் கொள்ளப்படும் என்பதுடன், வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுள்ள உறுப்பினர்களின் வரவானது எவ்வகையிலும் இரகசிய வாக்கெடுப்பு நடவடிக்கையில் தாக்கத்தை செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

17. கிளைக் குழுத்தெரிவின் போது வாக்கெடுப்பு நடைபெறின் வாக்குப்பெட்டியிலுள்ள வாக்குகளை எண்ணுவதற்கு தவிசாளர் ஆரம்பித்தல் வேண்டும்.

(i) வாக்கெடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட அங்கத்தவர்களது எண்ணிக்கையும், வாக்குப்பெட்டியிலுள்ள வாக்குச்சீட்டுக்களின் எண்ணிக்கையும் சமனாக இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.
(ii) சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட உபவிதி ஏற்பாடுகளுக்கமைவாக ஒவ்வொரு வகுதிக்கும் தெரிவு செய்யப்பட வேண்டிய எண்ணிக்கைக்கு மேலதிகமான அபேட்சகர்களுக்கு அடையாளமிட்டிருக்கும் வாக்குச்சீட்டுக்களை தவிசாளர் நிராகரித்தல் வேண்டும்.
(iii) வாக்குச்சீட்டில் அளிக்கப்பட்ட வாக்கானது எவ் அபேட்சகருக்கு அங்கத்தவர்களால் தமது வாக்கினை அளித்துள்ளனர் என்பது தெளிவாகா வண்ணம் அடையாளமிடப்பட்டிருக்குமிடத்து, தவிசாளர் அத்தகைய வாக்கினை நிராகரித்தல் வேண்டும்.
(iv) வாக்குச்சீட்டில் அங்கத்தவர், ஒருவர் ஒரு அபேட்சகருக்கு சாதகமாக ஒன்றுக்கு மேல் அடையாளமிட்டிருக்குமிடத்து அத்தகைய எல்லா அடையாளங்களும் ஒரு வாக்காகவே கொள்ளப்படல் வேண்டும்.
(v) நிராகரிக்கப்படாத வாக்குச்சீட்டுக்களை தவிசாளர் உறுதிப்படுத்தி ஏற்றுக்கொண்டு அச்சீட்டுக்களின் புள்ளி எண்ணிக்கைத்தாள்களின் அடிப்படையில் வாக்குகளை எண்ணுதல் வேண்டும்.

18. வாக்கெண்ணல் முடிவடைந்ததும், கிளைக்குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களை தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும், ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

19. சங்கத்தின் செயலாளர் கிளைக்குழுவிற்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை அத்தெரிவு நடைபெற்றவுடன், சங்க அலுவல்கள் நடாத்தப்படும் இடத்திலும் அக்குறிப்பிட்ட கிளையிலும், தெரிவு நடாத்தப்பட்ட இடத்திலும் துலக்கமான முறையில் பார்வையிடுவதற்கு காட்சிப்படுத்தல் வேண்டும்.

20. வாக்கெடுப்பு நடாத்தப்பட்ட முறை சம்பந்தமாக எழுகின்ற எத்தகைய கேள்விக்கும் ஆணையாளர் அளிக்கும் தீர்ப்பு இறுதியானதும் முடிவானதுமாகும்.

21. சங்கமொன்றின் கிளைக்குழுத்தெரிவு சம்பந்தமான சகல செலவுகளும் அச்சங்கத்தினாலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

22. சொற்பொருள் விளக்கம்

(i) பிரிவு 3,7,8,18 என்பவற்றில் குறிப்பிடப்பட்ட "ஆணையாளர்" எனக் குறிப்பிடப்படுபவர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் வடக்கு மாகாணம் அவர்களையும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரையும் குறிக்கும்.

(ii) பிரிவு 2,14,20,23 என்பவற்றில் குறிப்பிடப்பட்ட "ஆணையாளர்" எனக் குறிப்பிடப்படுபவர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் வடக்கு மாகாணம் அவர்களை குறிக்கும்.

(iii) "அபேட்சகர்" எனக் குறிப்பிடப்படுபவர் போட்டித் தெரிவின் போது முன்மொழியப்பட்ட அங்கத்தவர்களைக் குறிக்கும்.

(iv) உப விதி எனக் குறிப்பிடப்படுவது கூட்டுறவுச் சங்கமொன்றின் பதிவு செய்யப்பட்ட உபவிதிகளையும், ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்ட அதன் திருத்தங்களையும் குறிக்கும்.

23. இவ்விதிகளின் சொற்பொருள் விளக்கம் குறித்து பிணக்குகள் யாதேனும் ஏற்படின், ஆணையாளரின் முடிவு இறுதியானதும் முடிவானதுமாகும்.

24. இவ்விதிகளில் தமிழ், சிங்கள, ஆங்கில உரைகளுக்கிடையே முரண்பாடு தோன்றினால் தமிழ்மொழியே மேலோங்கி நிற்கும்.

EOG 09 - 0242

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.